திமுக ஆட்சியில் மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு மோசமான நிலையில் உள்ளது. டாஸ்மாக் முறைகேடு, அரசு வேலைக்கு பணம் என தமிழ்நாட்டின் கடந்த கால அம்மா ஆட்சியின் பெருமையை திமுக ஆட்சியில் மாநிலம் இழந்து வருவதாகவும், திமுக அரசு ஊடகங்களை அச்சுறுத்தி வருகின்றன.

கோயம்புத்தூர் மக்கள் திமுக அரசு தங்களுக்கு எதுவும் செய்யவில்லை என்பதை அறிந்து வைத்துள்ளனர். கோவையில் சாலைகள் மிக மோசமான நிலையில் உள்ள. சரியான குடிநீர் விநியோகம் இல்லை . கௌசிகா நதி சீரமைக்கப்படவில்ல. ஆனைமலை நல்லாறு திட்டம் செயல்படுத்தப் படவில்லை, உக்கடம் குளம் மேம்படுத்தும் பணிகள்கிடப்பில் உள்ளது, வெள்ளபாதிப்புக்குள்ளான தென்னைவிவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்கப்படவில்லை .

திமுக கடந்த தேர்தலில் வழங்கிய வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை. தமிழகத்தின் பொருளாதாரத்தை மிகவும் மோசமான நிலைக்கு இந்த அரசு கொண்டு சென்றுள்ளது. தமிழக மக்களின் வளர்ச்சிக்காக மத்திய அரசு பல்வேறு நிதிகளை வழங்கியபோதும் அதனை மாநிலத்தின் உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டிற்கு திமுக அரசு பயன்படுத்தாமல் அதிலும் முறைகேடுகள் செய்து வருகிறது. மீண்டும் திமுக ஆட்சிக்கு வந்தால், உதயநிதிதான் முதல்வர் ஆவார். இது, தமிழகத்தின் வளர்ச்சிக்கு எதிராக அமையும். இவ்வாறு அவர் கூறினார்.



▸ கோவை சிங்காநல்லூர் தொகுதி அதிமுக வேட்பாளர் கே.ஆர்.ஜெயராம் லெட்சுமி மில் அருகே தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டிருந்தபோது அப்பகுதி பொதுமக்கள் ஆர்த்தி எடுத்து அவரை வரவேற்றனர்.

# ஆர்மெடிஸ் விண்கலத்தில் 190 கோடி மதிப்புள்ள கழிவறை

தி கோவை ஹெரால்டு




சுமார் 50 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு, மனிதர்களை மீண்டும் நிலவுக்கு பக்கத்தில் கொண்டு செல்ல 'ஆர்டெமிஸ்-2' விண்கலத்தை அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது. ஃபுளோரிடாவில் உள்ள கென்னடி விண்வெளி மையத்திலிருந்து,கடந்த வியாழக்கிழமை அதிகாலையில் ஆர்டெமிஸ் 2 விண்ணை நோக்கி பாய்ந்தது. இதில், அமெரிக்காவைச் சேர்ந்த ரீட் வைஸ்மேன், விக்டர் க்ளோவர் , கிறிஸ்டினா கோச் கனடாவைச் சேர்ந்த ஜெர்மி ஹேன்சன் ஆகிய நான்கு விண்வெளி வீரர்கள் பயணம் மேற்கொண்டுள்ளனர். சுமார் 4.06 லட்சம் கி.மீ. தூரத்தை இந்த விண்கலம் கடந்து செல்லவுள்ளது. இந்த பயணத்தின் போது, வீரர்கள் யாரும் விண்வெளியில்தரையிறங்க மாட்டார்கள். 10 நாள்கள் விண்வெளி வீரர்கள் நிலவைச் சுற்றி வந்து, அதன் சுற்றுப்பாதையில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்கின்றனர்.

1972-ஆம் ஆண்டு அப்பல்லோ 2 விண்கல்த்துக்குப் பிறகு, பூமியின்சுற்றுப்பாதையைத் தாண்டி தொலைதூர விண்வெளிப் பகுதிக்கு மனிதர்கள் செல்வது இதுவே முதல்முறை. நிலவில் நிரந்தரமாக மனித குடியிருப்புகளை ஏற்படுத்துவதற்கான ஆய்வின்முதல்படியாகவும் இது பார்க்கப்படுகிறது. இதற்குப் பிறகு, 2028-ஆம் ஆண்டில் நிலவின் தென்துருவத்தில் மனிதர்களைத்தரையிறக்க நாசா திட்டமிட்டுள்ளது. அமெரிக்காவின் பிரபல தொழிலதிபர்களான எலான்மஸ்க்கின் ஸ்பேஸ்-எக்ஸ் மற்றும் ஜெஃப் பெசோஸின்ப்ளூ ஆரிஜின் போன்ற நிறுவனங்களும் நிலவில் தரையிறங்கும் விண்கலன்களை உருவாக்கி கொண்டிருக்கின்றன.

இந்தநிலையில், 'ஆர்டெமிஸ்-2' விண்கலத்தில் பொருத்தப்பட்டுள்ள 190 கோடி மதிப்புள்ள டாய்லெட் ஒழுங்காக வேலை செய்யவில்வலை என்கிற தகவல் வெளியாகியுள்ளது. இந்த விண்கலத்தில் சுமார் 190 கோடிமதிப்புள்ளகழிவறை அமைக்கப்பட்டுள்ளது.இது பெண்கள்மற்றும்ஆண்கள் என இருபாலருக்கும் ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அப்பல்லோவில் அமைக்கப்பட்டிருந்த கழிவறை கிட்டத்தட்ட 240 கோடி மதிப்பு கொண்டது. இதுதான், மனிதர்களால் உருவாக்கப்பட்ட உலகத்திலேயே விலையுயர்ந்த கழிவறை ஆகும். இந்த கழிவறையில் கழிவுகளை வெளியேற்ற அங்கு காற்று உறிஞ்சும் விசை பயன்படுத்தப்படுகிறது. சிறுநீர் ஒரு குழாய் வழியாக உறிஞ்சப்பட்டு சேகரிக்கப்படுகிறது. திடமானகழிவுக்குவலுவான இழுவைத் திறனுடன் ஒரு சிறப்பு இருக்கை உள்ளது. அதுதிடக்கழிவை இழுத்து ஒரு தனி கொள்கலனில் சேகரிக்கிறது. கழிப்பறையை வீரர்கள் பயன்படுத்தும் போது நகராமல் இருக்கும் வகையில் அவர்களை பிணைத்துக்கொள்ள சாதனங்கள் உள்ளன. விண்வெளிபயணம்எப்படி, அசாதாரமானதோ... அதேபோல, இங்குகழிவை வெளியேற்றுவதற்கும்தனி பயிற்சி தேவை.

# கங்கா மருத்துவமனை நோயாளிகளுக்கு நன்கொடை வழங்கிய ஆனந்த் அம்பானி

தி கோவை ஹெரால்டு




கங்கா முதுகெலும்பு தண்டுவட மறுவாழ்வு மையம்சார்பில்ரிலையன்ஸ் குழும இயக்குனர் அனந்த் அம்பானியின் பிறந்தநாள் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

முதுகுத்தண்டு காயத்தால் ஊனமுற்ற ஒருவரின் வாழ்க்கை மட்டுமல்லாமல், அவரது குடும்பமே பாதிக்கப்படுகிறது; இது வாழ்வாதாரம்,கல்விமற்றும் வருவாய்ஈட்டும்தன்மையை பாதிக்கும். சரியான நேரம் மற்றும் திட்டமிட்ட மறுவாழ்வு மிகவும் அவசியமானது, ஆனால், பலஏழைநோயாளிகளுக்கு இது எட்டாக்கனியாக உள்ளது.ஆனந்த்அம்பானி தனது பிறந்த நாளை முன்னிட்டு, ஆனந்த் அம்பானி நன்கொடை வழங்கியுள்ளார். இதன் மூலம் ஏழை மக்களுக்கு முழு ஆதரவுடன் கூடிய மறுவாழ்வு சேவையை கங்கா முதுகெழும்பு தண்டுவட மறுவாழ்வு மையம் சார்பில் வழங்க முடியும்.


இந்த காலத்தில், மருத்துவ சிகிச்சை, உடற்பயிற்சி சிகிச்சை தொழில்சார் சிகிச்சை , இயக்க திறன் மற்றும் வீல்ச்சேர் பயிற்சி, மூத்திரம் மற்றும் குடல் பராமரிப்பு, உளவியல் ஆலோசனை, ஊட்டச்சத்து ஆதரவு, மற்றும் தொழில் மற்றும் செயல்பாட்டு மறுவாழ்வு ஆகியவை வழங்கப்படும். இந்த சிகிச்சை முறை நோயாளிகள் மீண்டும் குணமடைந்து,வேலைக்கு செல்ல முடியும். அதோடு, பாதிக்கப்பட்ட அவர் மரியாதையுடன்சமூகத்தில் வலம் வரவும் உதவுகிறது.

இந்த நிகழ்வில் பேசிய கங்கா முதுகெலும்பு தண்டுவட மறுவாழ்வு மையத்தின் நிர்வாக அறங்காவலர் டாக்டர் எஸ். ராஜசேகரன் , "இந்த அர்த்தமுள்ள உதவிக்காக நாங்கள்ஆழ்ந்தநன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இந்த ஆதரவுநோயாளிகள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் வாழ்க்கையில் நீடித்த மாற்றத்தை ஏற்படுத்தி, அவர்களுக்கு நம்பிக்கையுடனும் மரியாதையுடனும் முன்னேற உதவும்," என்று கூறினார்.

நிகழ்ச்சியில் முதுகு தண்டுவடத்தால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்று ஆனந்த் அம்பானியின் பிறந்த நாளை ஒட்டி கேக் வெட்டி மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர்.

# இந்தியாவின் முதல் கடல் விமான சேவை வெற்றிகரமாக சோதனை

தி கோவை ஹெரால்டு




இந்தியாவில் நீர்நிலைகள் அதிகமாக உள்ளபகுதிகளில் விமான நிலையங்களைஅமைப்பது சாத்தியமில்லாத சூழலில், கடல் விமானப் போக்குவரத்தை மேம் படுத்த மத்திய அரசு திட்டமிட்டு வருகிறது. இதன் மூலம் சுற்றுலா வளர்ச்சியையும் ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. சமீபத்தில் திருத்தப்பட்ட 'உடான்'திட்டத்திலும்கடல் விமானப்போக்குவரத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்தியாவின் முதல் கடல் விமான சேவை நிறுவனமாகஸ்கைஹோப் ஏவியேஷன் நிறுவனம் உருவெடுத்துள்ளது. ஸ்பைஸ்ஜெட்நிறுவனத்தின் நிறுவனர் அஜய் சிங்கின் மகள் அவனி சிங் இந்த நிறுவனத்தை தொடங்கி நடத்தி வருகிறார்.

இந்த நிறுவனம் தனது முதல் கடல் விமானத்தின் தரையிறக்கம் மற்றும் புறப்படுதல்சோதனையை ரிஷிகேஷில் உள்ள கங்கை தடுப்பணையில் வெற்றிகரமாக நடத்தியுள்ளது.சோதனைப் பறப்பின் போது விமானம் கங்கை தடுப்பணையில் பாதுகாப்பாக தரையிறங்கி பின்னர் மீண்டும் வெற்றிகரமாக மேலெழுந்தது.

முன்னதாக விமானப் போக்குவரத்தை நிறுத்தியிருந்த 'ஃப்ளை பிக்' நிறுவனத்துக்குச் சொந்தமான டர்போப்ராப் விமானத்தில் மிதவை கருவிகள் பொருத்தப்பட்டு அதை கடல் விமானமாக மாற்றியுள்ளனர்.

இந்திய விமானப் போக்குவரத்து இயக்குநரகத்திடம்இருந்து அனுமதி கிடைத்தவுடன், 19 இருக்கைகள் கொண்ட இந்த கடல் விமானம் முதற்கட்டமாக லட்சத்தீவுகளில் உள்ள ஐந்துதீவுகளுக்குஇடையில் இயக்கப்பட உள்ளது.

இது குறித்து ஸ்கைஹோப் ஏவியேஷன் நிறுவனத்தின் நிறுவனர் அவனி சிங் கூறியதாவது: வழக்கமான விமான நிலையங்களை அமைக்க முடியாத அல்லது மேம்படுத்துவதற்கு கடினமான பகுதிகளுக்கு போக்குவரத்து வசதியை ஏற்படுத்துவதே இந்த முயற்சியின்நோக்கமாகும். கடல் விமானங்கள் புதிய பயண வழித்தடங்களை உருவாக்கி, பயண நேரத்தை குறைத்து, தொலைதூர பகுதிகளை நாட்டின்பிற பகுதிகளுடன் இணைக்க உதவும். சுற்றுலா வளர்ச்சியையும் பிராந்திய அணுகலையும் மேம்படுத்துவதில் இந்த சேவைமுக்கியபங்காற்றும் என அவர் தெரிவித்தார்.

### யுவராஜ் வாழ்த்தி கொடுத்த

# ஜெர்சியை குப்பையில் வீசிய ஸ்டூவர்ட் பிராட்

தி கோவை ஹெரால்டு





இந்தியகிரிக்கெட் அணி 2007ம் ஆண்டுடி20 உலகக் கோப்பை மற்றும் 2011ம் ஆண்டு 50 ஓவர் உலகக் கோப்பையை வென்றது. இந்த இரு தொடரிலுமே இந்திய அணியின் வெற்றிக்கு காரணமாக இருந்த யுவராஜ் சிங் தொடர் நாயகனாக தேர்வு செய்யப்பட்டார். 2007ம் ஆண்டு டி 20 தொடரில், இங்கிலாந்து அணிக்கு எதிரான ஆட்டத்தில் அந்த அணியின் பந்து வீச்சாளர் ஸ்டுவர்ட் பிராடின் ஒரே ஓவரில் 6 சிக்ஸர்களை விளாசினார் யுவராஜ். இந்த சிக்ஸர்களை கண்டு உலகமே வியந்துபோனது.

தற்போது, ஒரே ஓவரில் 6 சிக்ஸர்களை அடித்தது , ஐ.பி.எல் சேர்மன் லலித் மோடியிடம் இருந்து விலையுயர்ந்த காரை பரிசாகப் பெற்றது குறித்து யுவராஜ் மனம் திறந்து பேசியுள்ளார். அவர் கூறியிருப்பதாவது, '' அந்த தொடரின் போது, ஒரே ஓவரில் யாராவது 6 சிக்ஸர்களை அடித்தால் ஃபெராரி கார் பரிசாக வழங்கப்படும் என்று சொல்லப்பட்டது. ஸ்டுவர்ட் பிராடின் ஓவரில் 6 சிக்ஸர்களை அடித்த பிறகு, லலித் மோடியிடம் சென்று, காரை கேட்டேன். அவரோ... ஒரு போர்ச்சே காரை வாங்கிக் கொடுத்தார்.

இந்த தொடரில் ஸ்டுவார்ட் பிராடின் தந்தை, கிறிஸ் பிராட் போட்டி நடுவராக இருந்தார். நான் 6 சிக்ஸர்களை அடித்ததும் என்னிடம் வந்த அவர், எனது மகனின் கேரியரை முடித்துவிட்டாய் என்று கூறினார். பின்னர், என்னிடத்தில் ஸ்டுவர்ட் பிராடின் ஜெர்சி ஒன்றை கொடுத்து அவரை வாழ்த்தும்படி கேட்டுக் கொண்டார். 'இந்த உலகத்தில் சிறந்த பந்து வீச்சாளராக வளர வாழ்த்துகள்' என்று எழுதி கொடுத்தேன்.

ஆனால், பின்னர் அந்த ஜெர்சி குப்பையில் வீசி விட்டதாக நான் கேள்விப்பட்டேன். ஆனால், இந்த கடினமான தருணத்தைத் தாண்டி அவர் டெஸ்ட் கிரிக்கெட்டில் மிகச்சிறந்த பந்து வீச்சாளராக உருவானார். அதனால், அவரின் கரியரை நான் முடிக்கவில்லை. அவரை, ஸ்ட்ராங்கான பந்துவீச்சாளராகவே மாற்றினேன் '' என்று கூறியுள்ளார்.

# பயில்வான் ரங்கநாதனை கிழித்தெடுத்த பிக்பாஸ் தாமரை



யூடியூப்பில் பெண்கள் மற்றும் நடிகைகள் குறித்து ஆபாசமாக கருத்துக்களை பேசிவரும் பிரபல நடிகரும் பத்திரிக்கையாளருமான பயில்வான் ரங்கநாதன், சமீபத்தில் பிக் பாஸ் பிரபலம் தாமரை குறித்து பேசியது இணையத்தில் வைரலாக பரவிய நிலையில், இதற்கு தாமரை கடுமையான சொற்களால் பதிலடி கொடுத்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள வீடியோ பதிவில்,

வணக்கம் மக்களே! தயவுசெய்து என்னை எல்லாரும் மன்னித்துக் கொள்ளுங்கள். ஒரு ஆளை எனக்கு கிழி கிழினு கிளிக்கனும்னு ஆசை. அது யார் என்று கேட்டீர்கள் என்றால் அது மூத்த பத்திரிக்கையாளராம், பயில்வான் ரெங்கநாதனாம். உனக்கு அறிவு என்பது இருக்கிறதா? பெண்களை பற்றி உனக்கு என்ன தெரியும்? நீ உன் இஷ்டத்திற்கு என்னென்னவோ பேசுகிறாய்? பெண்கள் எல்லோரையும் குறைபேசிக் கொண்டே இருக்க உனக்கு வெக்கமா இல்லையா? உனக்கு பிள்ளைகள் இருக்கும். எனக்கு என்ன தோன்றுதுன்னா உனக்கு பெண்களை பிடிக்கவில்லை. ஆண்களை மட்டும் தான் பிடிக்கும் என்று நினைக்கிறேன்.

பெண்களை பற்றி குறை பேசிக்கிட்டே இருக்க, எனக்கு தெரிஞ்சு, கண்டிப்பா உனக்கு குழந்தை பிறந்திருக்க வாய்ப்பு இல்லை. இந்த மாதிரி பெண்கள் பற்றி இழிவா பேசிக்கொண்டே, பத்து ரூபாய் வாங்கித் சாப்பிடுவதற்கு நல்லா என் வாயில் வந்துவிடும். ஆளையும் மூஞ்சியும் பாரு, பயில்வான் ரங்கநாதனா, என்னைப் பற்றி உனக்கு தெரியாது, அல்லவா? நீ ஒரு இடத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டு, இருக்கிறாய் அல்லவா? எப்போது, என்னை நீ நேரில் பார்க்கிறாயோ, அன்று எனக்கு இந்த மாதிரி இந்த இடத்தில் பேசவேண்டும், பேசக்கூடாது என்று எனக்குத் தெரியவில்லை. நான் பக்கா கிராமத்துக்காரி. கையில கிடைச்சா பின்னி எடுத்துடுவேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.


## நீதிபதி யஷ்வந்த் வர்மா ராஜினாமா

டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்து அலகாபாத் உயர்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்ட நீதிபதி யஷ்வந்த் வர்மா தனது ராஜினாமா கடிதத்தை குடியரசுத் தலைவருக்கு அனுப்பியுள்ளார்.

டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த யஷ்வந்த் வர்மாவின்வீட்டில்2025 ஆம் ஆண்டுமார்ச்மாதம்நள்ளிரவில் தீ விபத்து ஏற்பட்டது. தீயணைப்புப் படையினர் சென்று தீயை அணைத்தபோது, வீட்டின் ஒரு அறையில் பாதி எரிந்த நிலையில் மூட்டை மூட்டையாக 500 ரூபாய் நோட்டுகள் கண்டெடுக்கப்பட்டன. இது குறித்த செய்திகள் வெளியாகி நாடு முழுவதும் கடும் அதிர்வலையை ஏற்படுத்தியது. நீதிபதியின் வீட்டில் பணம் சிக்கிய விவகாரம் குறித்து விசாரிக்க உச்ச நீதிமன்றம் ஒரு குழுவை அமைத்தது. குழுவின் விசாரணையில் பணம் இருந்தது உறுதியானது. இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, டெல்லியில் இருந்து யஷ்வந்த் வர்மா அலகாபாத் உயர்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டார். இதற்கிடையில், நீதிபதி யஷ்வந்த் வர்மாவை மக்களவை உறுப்பினர்கள் 146 பேர் மற்றும் மாநிலங் களவையைச் சேர்ந்த 62 உறுப்பினர்கள் என மொத்தம் 208 எம்.பி.க்கள் சார்பில் நாடாளுமன்றத்தில் நோட்டீஸ் சமர்ப்பிக்கப்பட்டது. மக்களவையில் நீதிபதியின் பதவிநீக்க தீர்மானம் ஏற்கப்பட்டதைத் தொடர்ந்து, அதுகுறித்து விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க கடந்த ஆகஸ்ட் மாதம் உச்சநீதிமன்ற நீதிபதி அரவிந்த் குமார், சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவாஸ்தவா, கர்நாடக உயர்நீதிமன்ற மூத்த வழக்குரைஞர் பி.வி.ஆச்சார்யா ஆகியோர் அடங்கிய மூவர் குழுவை மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா அமைத்தார்.

இந்த குழு விசாரணை நடத்திவரும் நிலையில், நீதிபதி யஷ்வந்த் வர்மா ராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்துள்ளார். அவரதுராஜினாமாகடிதம்குறித்துகுடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு விரைவில் முடிவெடுப்பார் என கூறப்படுகிறது.

# உலகின் முதல் இளம் பெண் ஆடிட்டர் யார்?



பட்டயக் கணக்காளர் எனப்படும் சார்ட்டட் அக்கவுண்டன்ட்படிப்பிற்கு இந்தியா மட்டுமல்ல உலகம் முழுக்கவே நல்ல வரவேற்பு உள்ளது. வருவானம் மற்றும் நிதி சார்ந்த தேவைகளுக்கு ஆடிட்டர்கள் அவசியம் தேவை என்பதாவ், சிறு நிறுவனங்கள் முதல் பெரிய நிறுவனங்கள் வரை சார்ட்டட் அக்கவுண்டன்ட்களுக்கு டிமான்ட் அதிகமாக உள்ளது. ஆனால், சிஏ தேர்வில் வெற்றி பெற அளவற்ற உழைப்பும் நிறைய அறிவுத்திறனும் தேவை. பெற ஒருவர் 4 கட்ட தேர்வுகள் எழுத வேண்டும். இந்திய பட்டயக் கணக்காளர்கள் கழகம் நடத்தும் சிஏ முதல்நிலை, இடைநிலை தேர்வு மற்றும் இறுதித் தேர்வுகளில் வெற்றி பெற வேண்டும். இடைநிலை தேர்வில் வெற்றி பெற்ற பிறகு, ஏதாவது ஆடிட்டிங் நிறுவனத்தில் பணி புரிந்து அனுபவத்தை பெற வேண்டும். பயிற்சி காலம் முடிந்ததும், சிஏ ஃபைனல் தேர்வை எழுதலாம். இப்படி, பல கட்டங்களை கடந்துதான் ஆடிட்டராக முடியும்.

இப்படி,பலகட்டங்களை கடந்துதான் ஆடிட்டராக முடியும். இந்தியாவிலேயே , கடினமான தேர்வு முறை கொண்டதுதான் ஆடிட்டருக்கான தேர்வு. இத்தகைய, கடினமான படிப்பை 19 வயதிலேயே பாஸ் செய்து கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார் இந்திய இளம் மாணவி ஒருவர். மத்தியப் பிரதேச மாநிலம் மொரினோ நகரைச் சேர்ந்தவர் நந்தினி அகர்வால். இவர் 13 வயதிலேயே, 10ம் வகுப்பு பாஸ் செய்து விட்டார். 15 வயதில், 12ம் வகுப்பை பாஸ் செய்த பிறகு, சார்ட்டட் அக்கவுண்டன்ட் படிக்க முடிவு செய்தார். 5 ஆண்டுகளுக்குப் பிறகு, கடந்த 2021ம் ஆண்டு சார்ட்டட் அக்கவுண்டன்ட் இறுதித் தேர்வு எழுதினார். அதில், 800 மார்க்குகளுக்கு 614 மார்க் அகில இந்திய அளவில் முதல் ரேங்க் பிடித்தார். இளம் வயதிலேயே ஆடிட்டர் ஆனபெண் என்றுகின்னஸ் புத்தகத்தில் நந்தினி அகர்வாலின் சாதனை இடம் பெற்றுள்ளது.

# நிலவில் மனித தளம் அமைக்க இந்தியா-அமெரிக்கா கூட்டு முயற்சி

தி கோவை ஹெரால்டு



எதிர்காலத்தில்நிலவில் மனிதர்கள் தங்கக்கூடிய தளத்தை அமைக்க இந்தியாவும்அமெரிக்காவும் இணைந்து செயல்பட திட்டமிட்டுள்ளதாக இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். நிலவை மையமாகக் கொண்டு நடைபெறும் ஆய்வுகளில் இந்த இரு நாடுகளும் தற்போது முன்னிலை வகித்து வருகின்றன.

2023ஆம் ஆண்டு இந்தியாவின் சந்திராயன்-3 விண்கலம் நிலவின் தென் துருவப் பகுதியில் வெற்றிகரமாக மென்மையான தரையிறக்கம் செய்தது. இதன் மூலம் நிலவின் தென் பகுதியில் முதன்முறையாக தரையிறங்கிய நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றது.

நிலவின் தென் துருவப் பகுதியில் பனியாக நீர் இருப்பதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர். இது எதிர்காலத்தில் மனிதர்கள் நிலவில் தங்குவதற்கும் ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்கும் முக்கியமான வாய்ப்புகளை உருவாக்கும் என கூறப்படுகிறது. இதற்கிடையில், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) ககன்யான் திட்டம் மூலம் மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகிறது.

அதேபோல், அமெரிக்கா தனது ஆர்ட்டெமிஸ் திட்டம் மூலம் நிலவை மையமாகக் கொண்டு பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. ஆர்ட்டெமிஸ்2 திட்டத்தின் கீழ் மனிதர்கள் நிலவை சுற்றி வர உள்ளனர். இது ஆர்ட்டெமிஸ்3 திட்டத்தின் மூலம் மனிதர்களை நேரடியாக நிலவில் தரையிறக்குவதற்கான முன்னோடி திட்டமாகும்.

சந்திராயன்-3 மூலம் கிடைத்த தரவுகளும் நிலவு தொடர்பான பல்வேறு ஆய்வுகளுக்கு உதவியாக உள்ளன. இவ்வாறாக நிலவை மையமாகக் கொண்ட ஆய்வுகளில் இந்தியாவும் அமெரிக்காவும் முக்கிய பங்கு வகித்து வரும் நிலையில், எதிர்காலத்தில் இஸ்ரோ மற்றும் நாசா இணைந்து நிலவில் மனித தளம் அமைக்கும் திட்டம் மேற்கொள்ளப்படலாம் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# கேட்ட வரம் தரும் ஒன்னிபாளையம் கருப்பராயன் தேர்தல் முடிவை தீர்மானிக்கும் சக்தி

தி கோவை ஹெரால்டு



தமிழ்நாட்டில் குறிப்பாக, மேற்கு மாவட்டங்களில் தேர்தல் முடிவுகளைதீர்மானிக்கும்கேந்திர மாக மாறியுள்ளது ஒரு ஆன்மீக தலம். கடந்த பல ஆண்டுகளாக தன்னைநாடிவரும்பக்தர்களுக்கு கேட்ட வரத்தை, கோரிக்கையை உடனே நிறைவேற்றித்தந்து, மக்களின் மனதில் சிம்மாசனம் போட்டு அமர்ந்திருக்கும் ஒருவர். அவர்தான் அருமிகு எல்லை கருப்பராயன்.

கோவை மாவட்டம் மேட்டுப் பாளையத்திற்கு அருகிலுள்ள ஒன்னிபாளையம் என்ற ஊரின் எல்லையில் அமைந்துள்ளது அருள்மிகு எல்லை கருப்பரா யன்திருக்கோவில்.எல்லைகருப்ப ராயனை,அந்தபகுதிசுற்றுவட்டார மக்கள் எப்போதாவது சென்று தரிசிப்பது உண்டு. ஆனால், கடந்த சில ஆண்டுகளாக இந்நிலை தலைகீழாக மாறியது. அதற்குக்காரணம், இக்கோவிலின் சிறப்பையும் அருமையையும் உலகம் முழுவதும் இக்கோவிலின் சிறப்பைஎடுத்துரைத்தரைத்தன் காரணமாக இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து பக்தர்கள் வர ஆரம்பித்தார்கள்.

கடந்தசிலஆண்டுகளாகநூறு. ஆயிரம், லட்சம் என பக்தர்கள் குவிய தொடங்கினார்கள். எல்லை கருப்பராயனை வழி படும் பக்தர்கள் யாரும் குடி பழக்கமோ புகை பழக்கமோ இல்லாதவர்களாக, பெண்மையைபோற்றக்கூடியவர் களாகஇருக்கிறார்கள். இக்கோவி லுக்கு இந்தியாவின் மேதகு துணை ஜனாதிபதி சி.பி.ராதா கிருஷ்ணன், மேற்குவங்க முன் னாள் ஆளுநர் அனந்தபோஸ், தற்போதைய மேற்கு வங்க ஆளுநரும் அப்போதைய தமிழ்நாடு ஆளுநரும் ஆன என்.ஆர். ரவி, தற்போதைய தமிழ்நாடு ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், கோவா முதலமைச்சர் பிரமோத்சாவந்த், உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி நீதியரசர் சஞ்சய் கிஷன் கவுல், உச்சநீதிமன்ற நீதிபதி நீதியரசர் ஆர்.மகாதேவன், சென்னை உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக இருந்த நீதியரசர் ராஜா, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி நீதியரசர் சுரேஷ்குமார், முன்னாள் நீதிபதிகள் பி. ராஜேந்திரன், கோவிந்தராஜ், இஸ்ரோ-வின் முன்னாள் தலைவர் திரு. கிரண்குமார் மற்றும் மத்திய, மாநில அரசு உயரதிகாரிகள், அரசியல்கட்சித்தலைவர்கள், இன்னாள், முன்னாள் அமைச்சர் கள்எனபல்வேறுஅதிகாரமையங் களிலுள்ள முக்கியஸ்தர்கள் வருகைதந்துள்ளனர்.

இக்கோவிலில் யாகம், பரிகாரம், தரிசன கட்டணம் என எந்தவொரு நயா பைசாவும் பெற்றுக்கொள்வதில்லை. ஏழை, எளிய மக்களும் வந்து வழிபடுகின்றனர். கடந்த எட்டு ஆண்டுகளில் கோவிலுக்கு வருகைதரும் பக்தர்களின் எண்ணிக்கை பத்து லட்சத்திற்கு அதிகம். கிட்டத்தட்ட நான்கு லட்சம் குடும்பங்கள் தவறாது இக்கோவிலுக்கு வருகை புரிகின் றனர். இங்கு தொடர்ந்து வரும் பக்தர்களை ஒருங்கிணைக்கப் பட்டு,அவர்களுக்குதகவல்பரிமாற் றம் செய்வதற்கென தனித் தனி 1000-க்கும் மேற்பட்ட வாட்ஸ்அப்குரூப்-கள்நிர்வகிப்பப் படுகின்றன. இதனால், தகவல் பரிமாற்றம் மிக எளிதாகவும் விரைவாகவும் நடைபெறுகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன், இல்லந்தோறும் திருவிளக்கு பூஜை என்ற ஆன்மீக பூஜையில் ஒரே நாளில் 1,75,000 இல்லங்களில் திருவிளக்கு பூஜை நடைபெற்றது.

இக்கோவிலானது ஆன்மீக தலம் மட்டுமில்லாது சமூக சிந்தனை, தேசப்பற்று என பலதளங்களில் செயல்பட்டு வருவதினால் தமிழ்நாடு சட்டமன்றத்தேர்தலிலும் இக்கோவில் முக்கிய பங்கு வகிக்கும் வல்லமை கொண்ட அமைப்பாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பு ஊடகங்களிலோ சமூக வலைதளங்களிலோ தன்னை வெளிக்காட்டிக்கொள்வதில்லை. கிட்டத்தட்ட 6% ஓட்டு வங்கியை கொண்டதாக இவ்வமைப்பு உள்ளது. தமிழ்நாடு சட்டமன்றத்தேர்தல் முடிவுகளில் முக்கிய பங்கு வகிக்கும். குறிப்பாக, கோவை, திருப்பூர், நீலகிரி, ஈரோடு, நாமக்கல், சேலம், கரூர், திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களிலுள்ள சட்டமன்ற தொகுதிகளில் இக்கோவிலுக்கு வரும் பக்தர்கள் பல ஆயிரக்கணக்கில் உள்ளனர். இப்பக்தர்களுக்கு அனைவரும் சமூக அமைப்பாக கட்டமைக்கப்பட்டுள்ளதால், தலைமை என்ன சொல்கிறதோ அதை மட்டும் செய்யக்கூடியவர்களாக இருக்கிறார்கள்.எனவே2026-தமிழ் நாடு சட்டமன்றத்தேர்தல் களத்தில் ஒன்னிபாளையம் எல்லை கருப்பராயன் வாக்குகளை கொடுப்பவராக விளங்குகிறார்.இந்தவாங்குவங்கி தேர்தல் களத்தில் எந்த பக்கம் என்பது அருள்மிகு எல்லை கருப்பராயனுக்கு மட்டுமே வெளிச்சம்.




LAKSHAKA TEX LLP




## பி.எஸ்.ஜி பாலிடெக்னிக் கல்லூரியில் மாணவர்கள் திட்டக் கண்காட்சி



பி.எஸ்.ஜிபாலிடெக்னிக் கல்லூரியில் மாணவர்கள் திட்டக்கண்காட்சி கல்லூரி கலையரங்கத்தில் நடைபெற்றது.

இதனை தலைமை விருந்தினராக பி.எஸ்.ஜி தொழில்நுட்பக் கல்லூரியின் முதல்வர் டாக்டர் கே.பிரகாசன் பங்கேற்று தொடங்கி வைத்தார். கல்லூரி முதல்வர் டாக்டர் பி. கிரிராஜ் விழாவிற்கு மாணவர்கள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு செயல்பாடுகளில் தீவிரமாக ஈடுபட வேண்டுமென ஊக்குவித்தார்.

மொத்தம் 147 திட்டங்கள் மெக்கானிக்கல், ஆட்டோமொபைல், ஃபவுண்ட்ரி, மெகாட்ரானிக்ஸ், மின்சாரம், மின்னணு, செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல், கணினி பொறியியல், கணினி நெட்வொர்க்கிங், தகவல் தொழில்நுட்பம், துணி மற்றும் ஆடை தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருந்து மாணவர்களால் காட்சிப்படுத்தப்பட்டன.

பல்வேறு பிரிவுகளில் சிறந்த திட்டங்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் பி.எஸ்.ஜி நிறுவனங்களின் தேர்வு இயக்குநர் டாக்டர் ஜி.சந்திர மோகன் வழங்கினர்.

## ஃபிக்கி ஃப்ளோ கோவை கிளை தலைவராக பார்னிகா குப்தா பொறுப்பேற்பு

தி கோவை ஹெரால்டு

இந்தியதொழில்மற்றும் வர்த்தக சபை அமைப்பின் மகளிர் பிரிவான ஃபிக்கி ஃப்ளோ அமைப்பின் புதிய தலைவராக பார்னிகா குப்தா பொறுப்பேற்றார்.



இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கிரெசில் நிறுவனத்தின் முன்னாள் தலைமை செயல் அதிகாரியும், "பியாண்ட் தி ப்ளே" நூலாசிரியருமான ரூபக் குட்வா கலந்து கொண்டு சிறப்பு உரையாற்றினார். மேலும், முன்னாள் தலைவர்கள் அபர்னா சுங்கு மற்றும் மீனா சுவாமிநாதன் ஆகியோர் புதிய நிர்வாக குழுவினரை வரவேற்றார்.

குறிப்பாக, பெண்களின் முழுமையான முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்ட "ரைஸ்" திட்டத்தை இந்த ஆண்டில் விரிவாக செயல்படுத்த உள்ளதாக பார்னிகா குப்தா உறுதி அளித்தார். நிகழ்ச்சியில் ரஞ்சனா சிங்கல், ப்ரீதா பத்ரிநாதன், மேக்னா கோனா ராமா முனுகூர், கின்ஜல் ஜாவேரி உள்ளிட்டோர் பல்வேறு நிர்வாக பொறுப்புகளை ஏற்றுக்கொண்டனர்.

## உலக சுகாதார தினம்: கேஎம்சிஎச் சூலூர் மருத்துவமனை விழிப்புணர்வு நிகழ்ச்சி




கேஎம்சிஎச் சூலூர் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை சார்பில் உலக சுகாதார தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சிகருமத்தம்பட்டியில் அமைந்துள்ள ஜான்சன்ஸ் தொழில்நுட்பக்கல்லூரியில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில்மாணவர் கள், பேராசிரியர்கள் மற்றும் மருத்துவநிபுணர்கள்கலந்து கொண்டு, உலகளாவிய சுகாதார முன்னுரிமைகள் குறித்து விரிவாக கலந்துரையாடினர்.

நிகழ்ச்சியில் பேசிய மருத்துவமனையின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் நல்லா ஜி. பழனிசாமி, "தரமான மருத்துவசேவைமருத்துவ மனைக்குள் மட்டுமல்லாமல், சமூகத்திற்கும் விரிவடைய வேண்டும் என்பதை உலக சுகாதார தினம் நினைவூட்டுகிறது" என்று தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து, நிர்வாக இயக்குநர் டாக்டர் அருண் பழனிசாமி கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார். பொது சுகாதாரத்தை பேணுவதில் தனிநபர் பொறுப்பு முக்கியம் என்பதையும், இளைஞர்கள் ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கு தூதுவர்களாக செயல்பட வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தினார். மேலும், பொதுமருத்துவ நிபுணர் டாக்டர் மனோஜ், அதிகரித்து வரும் வாழ்க்கை முறை நோய்கள் மற்றும் அவற்றை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிவதன் அவசியம் குறித்து உரையாற்றினார்.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் நூற்றுக் கணக்கான மாணவர்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டு, ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை பின்பற்ற உறுதிஎடுத்தனர்.

## ஜன் விஸ்வாஸ் சட்டத் திருத்தம் மக்கள் மீது நம்பிக்கை




தி கோவை ஹெரால்டு

■ வ.மு.முரளி

ஜன் விஸ்வாஸ் சட்டத் திருத்த மசோதா கடந்த ஏப்ரல் 1, 2026இல் நாடாளுமன்றத்தின்இருஅவைகளிலும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதனை 'மக்கள்நம்பிக்கை(விதிமுறைதிருத்த) சட்ட மசோதா' என்று சொல்லலாம். நம் நாட்டில் சிறு குற்றங்களுக்கும் கூட சிறைத் தண்டனை வழங்கிவந்த காலாவதியான பல சட்டங்களைச் சீர்திருத்தும் நோக்கத்தோடு, சிறு விதிமீறல்களுக்கு சிறைத் தண்டனையின்றி அபராதம் மட்டும் விதிக்கும்வகையில்இந்தசட்டத்திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது சுதந்திர இந்தியாவில் மிகப் பெரிய சட்ட சீர்திருத்தம் ஆகும். இதன்மூலமாக, நாடு முழுவதும் தேக்கமடைந்துள்ள 4.8 கோடி வழக்குகள் மறு ஆய்வு செய்யப்பட்டு விரைவில் எளிய முறையில் தீர்வு காணப்படும். இதன்மூலம் இனிமேல் சிறு குற்றங்கள், விதிமீறல்கள் அனைத்தும் குற்றமற்றதாகவே கருதப்படும்.

மேலும் தற்போது நீதிமன்ற வழக்கில் உள்ள சுமார் 717 சிறு குற்றங்களை குற்றம் அற்றதாகக் கருதி, அவற்றை குற்றவியல் பிரிவிலிருந்து நீக்கி, அபராதம் அல்லது எச்சரிக்கை விடுக்கும் உரிமையியல் விதிமீறல்களாக இந்தச் சட்டம் மாற்றியுள்ளது. மேலும் 67 சட்டப்பிரிவுகள் எளிமையாக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் நீதிமன்றங்களின் பணிச்சுமை குறைவதோடு, சிறைச்சாலைகளிலும் நெரிசல் குறையும் என்று கருதப்படுகிறது.

இதற்கான அடிப்படைத்தரவுகளை பல்வேறு அமைச்சகங்கள், தொழில் அமைப்புகள், சட்ட வல்லுநர்கள் வழங்கினர். ஆதாரப்பூர்வமான புள்ளிவிவரங்களுடன், 24 உறுப்பினர்கள் கொண்ட தேர்வுக்குழுவால் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு, 49 ஆலோசனைக் கூட்டங்களில் விவாதிக்கப்பட்ட பிறகே, ஜன் விஸ்வாஸ் சட்டத்திருத்த மசோதா உருவாக்கப்பட்டது.

இந்த மசோதா, காலாவதியான சட்டங்களை எளிமையாக்குவதிலும், தேவையற்ற குற்றவியல் விதிகளைக் குறைப்பதிலும் கவனம் செலுத்துகிறது. இது 23 அமைச்சகங்களை உள்ளடக்கிய 80 மத்தியச் சட்டங்களில் உள்ள 784 விதிகளைத் திருத்துகிறது. 42 மத்திய சட்டங்களில் இருந்த குற்றவியல் தண்டனைக்குரிய 183 சட்டப் பிரிவுகள் நீக்கப்பட்டுள்ளன. இது விதிமுறைகளுக்கு மக்கள் தாமாக இணங்குவதை எளிதாக்குகிறது. இந்தச் சீர்திருத்தத்தின் மூலம் 1,000-க்கும் மேற்பட்ட சிறு குற்றங்கள் முறைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1940ஆம் வருடத்திய மருந்து மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டத்தில் இருந்த சிறு பிழைகள் மீதான குற்றவியல் அம்சங்கள் நீக்கப்பட்டதால் மருந்து உற்பத்தித் துறைக்கு சட்டச் சிக்கல்களிலிருந்து நிம்மதிகிடைக்கும்.1957ஆம்வருடத்திய தில்லி அபிவிருத்தி சட்டம், 1994ஆம் வருடத்திய புது தில்லி முனிசிபல் கவுன்சில் சட்டம் ஆகியவற்றில் செய்யப்பட்ட திருத்தங்களால், சிறிய உள்ளாட்சி விதிமீறல்களுக்கு சிறை போன்ற கடும் தண்டனைகள் அகற்றப்பட்டிருக்கின்றன.

1956ஆம் வருடத்திய தேசிய நெடுஞ்சாலைகள் சட்டத்தில் செய்யப்பட்டுள்ளமாற்றங்கள்சரக்குப் போக்குவரத்து, உள்கட்டமைப்புத் துறைகளில் தொழில் புரிவதை எளிமைப்படுத்தும். 1988ஆம் வருடத்தியமோட்டார்வாகனசட்டத்தில் செய்யப்பட்டுள்ள மாற்றங்களால், சிறிய குற்றங்களும் விதீமீறல்களும் குற்றவியல் தண்டனையிலிருந்து விலக்கப்பட்டுள்ளன. எனினும் சாலைப் பாதுகாப்பு தொடர்புடைய கடுமையான குற்றங்களுக்கு விலக்கு அளிக்கப்படவில்லை.

நம் நாட்டில் தொழில் அபிவிருத்தி மற்றும் உள்நாட்டு வர்த்தகத்திற்கான மத்திய அரசுத் துறையால் (DPIIT) அங்கீகரிக்கப்பட்ட 2012 லட்சம் 'ஸ்டார்ட்அப்' நிறுவனங்கள் (புத்தொழில் நிறுவனங்கள்) உள்ளன. விதிமீறல்களுக்கு கடும் தண்டனை என்ற விதிமுறை தளர்த்தப்பட்டிருப்பதால், ஸ்டார்ட்அப் நிறுவனங்களுக்கும், 'இந்தியாவில் தயாரிப்போம்' என்ற திட்ட முனைப்பில் செயல்படும் சிறு, குறு நடுத்தர நிறுவனங்களுக்கும் சிரமங்கள் குறைந்துள்ளன.

அளவையாக்கச் சட்டத்தில் செய்யப்பட்ட சீர்திருத்தத்தால், லேபிள் பதித்தல், பேக்கிங் செய்தல் ஆகியவற்றில் நிகழும் சிறு பிழைகளுக்கு ஓராண்டு சிறை என்ற கடும் தண்டனை நீக்கப்பட்டிருக்கிறது. மாறாக சிறு பிழைகளையும் விதிமீறல்களையும் திருத்திக்கொள்ள புதிய மசோதா வாய்ப்பளிக்கிறது.

இந்தச்சீர்திருத்தம், 'குறைந்தபட்ச அரசு - அதிகபட்ச ஆளுகை' என்ற நரேந்திர மோடி அரசின் தொலைநோக்குப் பார்வையைப் பிரதிபலிக்கிறது. இந்த மாற்றம், தொழில்நுட்பத் தவறுகள் மற்றும் நடைமுறைப் பிழைகள் குற்றமாகக் கருதி தண்டிக்கப்படும் என்ற அச்சத்தைப் போக்குகிறது. மேலும், இந்த நடவடிக்கை, சிறு தவறுகளால் வணிகங்களுக்கு ஏற்படும் தொந்தரவுகளைக் குறைக்கிறது.

இதுவரை தண்டனை அச்சத்துடன் தொழில் புரிந்து வந்த நிலை மாறி, மக்கள் மீது நம்பிக்கை வைத்து அவர்களின் சிறு குற்றங்களைத் திருத்தும் வகையில் நம்பிக்கை அடிப் படையிலானதாக, ஜன் விஸ்வாஸ் திருத்தச்சட்டம்மூலமாக, பலசட்டங்கள் மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றன. இது இந்திய தொழில்துறையின் போட்டியிடும்திறனுக்குஊக்குவிப்பாக அமையும்.

உலக அளவில் தொழில் நடத்துவது எளிதாக உள்ள நாடுகளின் பட்டியலை உலக வங்கி ஆண்டுதோறும் வெளியிடுகிறது. இப்பட்டியலில் இந்தியா 2014இல் 142வது இடத்தில் இருந்தது, 2020இல் 63வது இடத்துக்கு முன்னேறி இருந்தது. ஜன் விஸ்வாஸ் சட்டத் திருத்தம் மூலமாக, இந்தப்பட்டியலில் இந்தியா மேலும் முன்னேற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. 2025-26 நிதியாண்டில் இந்தியாவின் ஏற்றுமதி வர்த்தகம் 791 பில்லியன் டாலரை எட்டியுள்ளது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு இது அடையாளமாகும். புதியசட்டத்திருத்தம் இதனை மேலும் அதிகரிக்கும்.

அதிகார வர்க்கத்தின் சிவப்புநாடா முறையையும், நீதிமன்றங்களில் குவியும் விதிமீறல் வழக்குகளின் எண்ணிக்கையையும் புதிய சட்டத் திருத்த மசோதா குறைக்கும். இதனால் நீதித்துறையின் பணிப்பளு 30% வரை குறையும் என்று மதிப்பிடப்படுகிறது. இதனால், பெருங்குற்றங்களை விசாரிப்பதில் மட்டும் நீதிமன்றங்கள் கவனம் கொடுக்க முடியும். தவிர, வர்த்தக தாவாக்களை நீதிமன்றம் செல்லாமலே தீர்த்துக் கொள்ளும் வாய்ப்புகளும் உருவாகியுள்ளன.

முந்தைய காங்கிரஸ் ஆட்சிக் காலங்களில் 'உரிமம் - அரசு ஒதுக்கீடு' (லைசென்ஸ்- கோட்டா) முறை அமலில் இருந்தபோது சிக்கலான சட்ட விதிமுறைகள் கோலோச்சின. அதுவே அதிகாரவர்க்கத்தின் ஊழலுக்கும் இடைத்தரகர்களின் தலையீட்டுக்கும் காரணமானது.

2012ஆம் ஆண்டு வோடஃபோன் நிறுவனமும் கெய்ர்ன் எனர்ஜி நிறுவனமும் முன்னோக்கு வரிவிதிப்பால் அவதிப்பட்டபோது உலக அளவில் இந்தியாவின் நற்பெயர் குலைந்தது. மாறாக, சட்டங்களை எளிமையாக்குவதன் மூலம் தொழில் புரிவதில் விதிமுறைக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கு மோடி அரசு தீவிர முயற்சிகளை மேற்கொள்கிறது.

2026ஆம்வருடத்தியஜன்விஸ்வாஸ் சட்டம், ஒழுங்குமுறை என்ற பெயரில் நடைபெறும் துன்புறுத்தல்களை இல்லாமல் ஆக்குகிறது; மக்கள்மீது நம்பிக்கை வைத்து செயல்படும் குறைந்தபட்ச அரசை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. ஜன விஸ்வாஸ் சட்டமானது, அதிகப்படியான சட்டத் தலையீடுகளைக் குறைப்பதன் மூலம் நம்பிக்கை அடிப்படையிலான நிர்வாகத்தை ஊக்குவிக்கிறது. எனவே, இதன் விளைவுகள் தொழில் துறையிலும் மக்களின் அன்றாட வாழ்விலும் சிரமங்களைக் குறைக்கும்.

## திராவிட மாடல் ஆட்சியே தமிழக வளர்ச்சிக்கு காரணம்

### செந்தில் பாலாஜி பெருமிதம்



கோவை தெற்கு சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் திமுக வேட்பாளராக போட்டியிடும் செந்தில் பாலாஜி, கோட்டைமேடு, பெரியகடை வீதி உள்ளிட்ட பகுதிகளில் 38 இடங்களில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

பின்னர் மரக்கடை பகுதியில் நிருபர்களை சந்தித்த அவர், "கோவை தெற்கு தொகுதியில் உள்ள அனைத்து தெருக்கள் மற்றும் வீடுகளுக்கும் நேரில் சென்று வாக்காளர்களைச் சந்திக்கும் முதற்கட்டப் பணிகளை வெற்றிகரமாக முடித்துள்ளோம். அடுத்த கட்டமாக வார்டு வாரியாக மீண்டும் வாக்காளர்களைச் சந்திக்கும் பணிகள் தொடங்கப்படும்," என்றார்.

மக்கள் ஆதரவைப்பற்றிபேசும்போது, "மு.க. ஸ்டாலினுக்கு மக்கள் அமோக ஆதரவு அளித்து வருகின்றனர். எங்கு சென்றாலும் ஆரத்தி எடுத்தும், மலர் தூவியும் உற்சாகமாக வரவேற்கின்றனர். இது எங்கள் வெற்றியை உறுதி செய்கிறது," என்று தெரிவித்தார்.

ஒன்றிய அமைச்சர் பியூஷ் கோயல் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் குறித்து எழுந்த கேள்விக்கு, "எங்கள் கட்சியின் தலைமையைப் பற்றி மற்ற கட்சியினர் கவலைப்பட தேவையில்லை. மீண்டும் முதலமைச்சராக மு.க. ஸ்டாலின் பதவி ஏற்க தயாராக உள்ளார்," என்று பதிலளித்தார்.

மத்திய அரசை விமர்சித்த அவர், "கடந்த 12 ஆண்டுகளில் கோவை மாவட்டத்திற்கு என்ன திட்டங்களை கொண்டுவந்தது என்பதை பட்டியலிட்டு ஓட்டு கேட்க வேண்டும்," என்றார்.

"இரட்டை இன்ஜின் அரசு" குறித்த கேள்விக்கு, அதிமுக பாஜக ஆட்சியில் தமிழகத்திற்கு கிடைத்த வளர்ச்சி குறித்து சந்தேகம் எழுப்பினார்.

தமிழ்நாட்டின் வளர்ச்சி குறித்து அவர் கூறுகையில், "தமிழகம் இன்று பொருளாதார வளர்ச்சியில் இரட்டை இலக்கத்தை எட்டியுள்ளது. இது திமுக அரசின் திராவிட மாடல் ஆட்சியின் பலன்," என்றார்.

மேலும், கோவை விமான நிலைய விரிவாக்கத்திற்காக மாநில அரசு ரூ.1,352 கோடி ஒதுக்கி நிலம் கையகப்படுத்தியிருந்தாலும், மத்திய அரசு பணிகளை தொடங்கவில்லை என்றும், மெட்ரோ ரயில் திட்டத்திற்கும் இன்னும் ஒப்புதல் அளிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.


இறுதியாக, "தமிழகத்தில் மீண்டும் திமுக ஆட்சி அமைவது உறுதி. கோவையில் அனைத்து தொகுதிகளிலும் திமுக கூட்டணி வெற்றி பெறும்," என்று செந்தில் பாலாஜி நம்பிக்கை தெரிவித்தார்.

## 60 ஆண்டுகளுக்கு முன்பு மும்பை தாஜ் ஹோட்டல் ரூம் வாடகை எவ்வளவு? வைரலாகும் கட்டண ரசீது...

தி கோவை ஹெரால்டு

மும்பையில் கேட்வே ஆஃப் இந்தியா அருகே கடற்கரையில் அமைந்துள்ள தாஜ் மஹால்பேலஸ்ஹோட்டல், இந்தியாவிலும் உலகம் முழுவதும் மிகவும் பிரபலமான ஒரு புகழ்பெற்ற ஹோட்டலாகும். இந்தியாவின் பல மாநிலங்களில் இருந்து மும்பைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள், இந்த ஹோட்டலின் முன்பு நின்று புகைப்படம் எடுப்பதை ஒரு நினைவாகக் கருதுகின்றனர்.






இந்நிலையில், 1966ஆம் ஆண்டைச் சேர்ந்த தாஜ் ஹோட்டலின் பழைய கட்டணரசீதுஒன்றுதற்போது சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

அந்த ரசீதின் படி, 1966ஆம் ஆண்டுஜனவரி10ஆம்தேதி ஒரு அறைக்கான வாடகை ரூ.105 ஆக இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனுடன் சேவை கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள் சேர்த்து ரூ.116.70 ஆகவும், இறுதியாக மொத்த செலவு ரூ.127.70 ஆகவும் இருந்ததாக அந்த ரசீதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது அதே தாஜ் மஹால் பேலஸ் ஹோட்டலில் ஒரு நாள் தங்குவதற்கான அறை வாடகை சுமார் ரூ.34,000 முதல் தொடங்குகிறது என்பது குறிப்பிடத் தக்கது.

1966ஆம் ஆண்டில் 10 கிராம் தங்கத்தின் விலை ரூ.84 மட்டுமே இருந்த நிலையில், அந்த காலத்தில் ரூ.127 என்ற தொகையும் பெரிய செலவாகவே கருதப்பட்டதாக சமூக வலைதளங்களில் பலர் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

## பாஸ்போர்ட், விசா தேவைப்படும் இந்தியாவின் ஒரே ரயில் நிலையம்

தி கோவை ஹெரால்டு

இந்தியாவில் நாடு முழுவதும் சுமார் எட்டாயிரத்துஐந்நூறுரயில் நிலையங்கள் உள்ளன. இந்நிலையங்களை தினமும் இலட்சக்கணக்கானபயணிகள்பயன்படுத்தி வருகின்றனர். பொதுவாக ஒரு ரயில் நிலையத்திற்குள் நுழைய செல்லுபடியாகும் பயணச்சீட்டு இருந்தால் போதுமானது.

ஆனால் இந்தியாவில் ஒரு குறிப்பிட்ட ரயில் நிலையத்தில் மட்டும் உள்ளே நுழையபாஸ்போர்ட் மற்றும் விசா கட்டாயமாக இருந்தது என்பது பலருக்கும் ஆச்சரியமான தகவலாகும். பாஸ்போர்ட் மற்றும்






விசா இல்லாமல் அந்த நிலையத்திற்குள் நுழைய முயற்சித்தவர்களுக்கு சிறைத் தண்டனை உள்ளிட்ட கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

பஞ்சாப் மாநிலத்தில் உள்ள அட்டாரி ஷாம் சிங் ரயில் நிலையத்தில் இத்தகைய கட்டுப்பாடு அமலில் இருந்தது. இந்தியா மற்றும் பாகிஸ்தான் எல்லைக்கு அருகில் அமைந்துள்ள இந்த நிலையம் இருபத்துநான்கு மணி நேரமும் தீவிர பாதுகாப்புகண்காணிப்பில் வைக்கப்பட்டிருந்தது.

1972 ஆம் ஆண்டு முதல் இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே இயங்கிய சம்ஜௌதா விரைவு ரயில் இந்த நிலையத்தின் வழியாக இயக்கப்பட்டு வந்தது.

இதனால் இந்த நிலையம் இரு நாடுகளுக்கிடையேயான முக்கிய போக்குவரத்து இணைப்பாக விளங்கியது.

2019 ஆம் ஆண்டு ஜம்மு காஷ்மீருக்கு வழங்கப்பட்டிருந்த மூன்றுநூற்று எழுபது ஆம் சட்டப்பிரிவுநீக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்தியா பாகிஸ்தான் இடையேயான சம்ஜௌதா விரைவு ரயில் சேவை நிறுத்தப்பட்டது. அதன் பின்னர் அட்டாரி இரயில் நிலையத்தில் இருந்த கடுமையான நுழைவு கட்டுப்பாடுகளும் நடைமுறையில் மாற்றமடைந்தன.

### மருத்துவமனையில் வானதி சீனிவாசன்

## தாய்க்காக களமிறங்கிய மகன் ஆதர்ஷ் கோவை வடக்கில் தீவிர பிரச்சாரம்



கோவை வடக்கு சட்டமன்றத் தொகுதி பா.ஜ.க வேட்பாளர் வானதி சீனிவாசன், உடல்நலக்குறைவு காரணமாகமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், அவரது மகன் ஆதர்ஷ் தேர்தல் களத்தில் களமிறங்கி வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்.

காலில் ஏற்பட்ட வீக்கம் மற்றும் கடுமையான சோர்வு காரணமாக நேற்று வானதி சீனிவாசன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இதனால் அவர் ஓய்வில் இருக்கும் நிலையில், தேர்தல் பிரச்சாரம் பாதிக்கப்படாமல் இருக்க அவரது மகன் ஆதர்ஷ், முன்னாள் பா.ஜ.க மாநிலத் தலைவர் அண்ணாமலையுடன் இணைந்து பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

தேர்தல் தேதி நெருங்கி வரும் சூழலில், இன்று காலை முதல் கண்ணப்பன் நகர், தயிரிட்டேரி, சம்பத் வீதி, ரத்தினபுரி உள்ளிட்ட பகுதிகளில் ஆதர்ஷ் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார். இப்பிரச்சாரத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள், குறிப்பாக இளைஞர்கள் மற்றும் பெண்கள், அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அண்ணாமலையுடன் வாகனத்தில் நின்றபடி, தனது தாய்க்கு தாமரை சின்னத்தில் வாக்களிக்குமாறு ஆதர்ஷ் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார்.

இது குறித்து அண்ணாமலை பேசும்போது, "வானதி அக்கா மருத்துவமனையில் ஓய்வில் இருந்தாலும், அவரது மகனும் நாங்களும் அனைவரும் இணைந்து அவருக்காக இந்தத் தொகுதியில் பணியாற்றி வருகிறோம்" என்றார்.

மருத்துவர்களின் தீவிர கண்காணிப்பில் உள்ள வானதி சீனிவாசன், அடுத்த 24 முதல் 48 மணி நேரத்திற்குள் மீண்டும் பிரச்சாரத்திற்குத் திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

வேட்பாளர் இல்லாத நிலையிலும், அவரது மகன் மற்றும் கூட்டணி கட்சியினரின் ஒற்றுமையான செயல்பாடு கோவை வடக்குத் தொகுதி வாக்காளர்கள் மத்தியில் கவனத்தை ஈர்த்துள்ளது.

அ.தி.மு.க மற்றும் பா.ஜ.க நிர்வாகிகளும் இந்த பிரச்சாரத்திற்கு தரவு தெரிவித்தனர்.

பிரச்சாரத்தின் போது பாஜக மாவட்ட தலைவர் ரமேஷ்குமார், அதிமுக வடக்கு சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் இஞ்சினியர் சந்திரசேகர், முன்னாள் பாஜக மாவட்ட தலைவர் பாலாஜி உத்தமராமசாமி ஆகியோர் உடனிருந்தனர்




Published by S.Kamalakannan Printed by S.Prabhakaran on behalf of Senthur Printers. Printed at Door No.7, Lakshmi Nagar, 2nd Street, Nallampalayam Road, New Sanganoor, Rathinapuri (Po), Coimbatore – 641027. Published from 27, Vinayagar Koil Street, Krishnaswamy Nagar, Ramanathapuram, Coimbatore – 641045. Editor K.Abirami. (Note: All the litigations aur within the jurisdiction of Coimbatore courts only.)